செ.வெ.எண்: 33/செப்டம்பர் தேதி : 18.09.2019

# பத்திரிக்கைச் செய்தி

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் பேசியதாவது.

முன்னாள் குழந்தைத் தொழிலாளர் மாணவர் செல்வன்.எம்.மூர்த்தி அரசு மருத்துவராக உருவானதற்கு இத்திட்டம் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளை பாராட்டினார். மேலும், குழந்தைத் தொழிலாளர்களை கண்டறிந்தால் உடனடியாக 1098 எண்ணிற்கு தகவல் தெரிவிக்க வேண்டும் எனவும், குழந்தைத் தொழிலாளர்களுக்கு இத்திட்ட சிறப்புப் பயிற்சி மையத்தின் மூலம் மறுவாழ்வு வழங்கலாம். தருமபுரி மாவட்டத்தை குழந்தைத் தொழிலாளர் எவரும் இல்லாத மாவட்டமாக மாற்ற அனைத்துத்துறை அலுவலர்களும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு தேவையான உதவிகளை இதய பூர்வமாக மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். மேலும், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மைய சிறார்கள் தயாரித்துள்ள பத்தாயிரம் விதை பந்துகள் போன்று கல்வித்துறையும் 15 இலட்சம் விதை பந்துகளை தயாரிக்கவும் அறிவுரை வழங்கினார்.

இத்திட்ட முன்னாள் மாணவர் எம்.மூர்த்தி குழந்தைத் தொழிலாளரக மீட்டு சிறப்புப் பயிற்சி மையம் மூலம் மறுவாழ்வு அளிக்கப்பட்டு இளங்கலை மருத்துவம் படிப்பது வரை இத்திட்டத்தின் மூலம் அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டது. தற்போது இவர் புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி ஆரம்ப சுகாதார நிலையத்தில் அரசு மருத்துவராக பணியில் சேர்ந்துள்ளது பற்றி திட்ட இயக்குநர் விவரித்தார். மேலும், இத்திட்டத்தில் 116 முன்னாள் குழந்தைத் தொழிலாளர் மாணவர்கள் 2019-20ம் ஆண்டில் பல்வேறு உயர்கல்வி பயின்று வருகின்றனர். தற்போது, இத்திட்டத்தின் கீழ் 22 சிறப்புப்பயிற்சி மையங்களில் பல்வேறு தொழில்களில் இருந்து மீட்கப்பட்ட 374 சிறார்கள் சிறப்புப் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களுக்கு பாட புத்தகங்கள், கல்வி பொருட்கள், மதிய உணவு, விடுதி வசதி, பேருந்து வசதி மற்றும் மருத்துவ பரிசோதனைகள் முன்னுரிமை அடிப்படையில் அரசு அளித்து வருகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எச்.ரஹமத்துல்லா கான், தருமபுரி சார் ஆட்சியர் திரு.ம.ப.சிவன் அருள், இஆப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.காளிதாசன், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட இயக்குநர் திரு.ந.சரவணன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி.கு.நாகலட்சுமி, முதன்மை கல்வி ஆலுவலர் (பொ) திரு.து.கணேஷ்மூர்த்தி, முன்னோடி வங்கி மேலாளர் திரு.கண்ணன், ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர், அரசு தொழிற்பயிற்சி நிறுவன முதல்வர், பல்வேறு துறை அலுவலர்கள் மற்றும் திட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**